Export of fish

* 281 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) whether there are fish exports at present from this State to (i) other States and (ii) out of India;

(*b*) if so, the details thereof; and

(*c*) the annual income derive from this sale?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) & (உ) 1970-71-ம் ஆண்டில் ரூ. 2,44 லட்சம் மதிப்புள்ள 6,764 டன் மீனும் மீன் பொருட்களும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இது தவிர, அநேக மீன் வியாபாரிகளும் ஏற்றுமதி முகமையாளர்களும் கடற்கரையோரமெங்கும் இரால்களை வாங்கி, பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்காக கேரளத்திலுள்ள கொச்சிக்கு அனுப்புகின்றனர். இவற்றின் சரியான புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. கடல்மீன்கள் தவிர ஆறு மற்றும் ஏரி (fresh water) *மீன்களும் இம்மாநிலத்திலிருந்து கல்கத்தா மற்றும் பிற இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. மத்திய மீனளக் கழகம் கல்கத்தாவுக்குக் கடந்த மூன்றாண்டுகளில் அனுப்பியுள்ள ஆறு மற்றும் ஏரி* (fresh water) *மீன்களின் விவரங்கள் வருமாறு:—*

1969-70—77 டன்—மதிப்பு ரூ. 1,07,800.

1970-71—45 டன்—மதிப்பு ரூ. 65,800.

1971-72—54 டன்—மதிப்பு ரூ. 77,000.

THIRU N. DENNIS: May I know whether export is by private parties or by the State? If private parties are there, will the Government come forward to set up a Fish Export Corporation in this State?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நான் சற்று முன்னால் சொல்லிய கணக்கு அரசாங்கத்தின் மூலம் மற்ற நாடுகளுக்கு அனுப்பப்படுவது பற்றியதாகும். தனிப்பட்டவர்களும் கடற்கரை ஓரங்களில் மீன்களை வாங்கி கொச்சி துறைமுகத்தின் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. 1,13 லட்சம் ரூபாய் அளவுக்கு அவர்கள் அனுப்புவதாக ஒரு கணக்கு இருக்கிறது. அது சரியான புள்ளி விவரமாக எனக்குத் தெரியவில்லை, அரசின்

1972 ஆகஸ்ட் 23]

மூலமாக முழுக்க முழுக்க வெளிநாடுகளுக்கு மீன் அனுப்ப வேண்டுமென்ற முறையில் சென்னை, தூத்துக்குடி துறைமுகங்கள் விரிவுபடுத்தப்பட்ட பிறகு திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

* 282 வினா.—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் கோட்டை அகழியில் மீன் வளர்க்க, அதனை விற்க தமிழ்நாடு அரசு மத்திய அரசின் அனுமதி பெற்றுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) வேலூர் கோட்டை அகழி, 1919-ஆம் ஆண்டிலிருந்து அதாவது 1904-ஆம் ஆண்டு பண்டைச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட சின்னம் என்று இக்கோட்டை அறிவிக்கப்படுவதற்கு முன்பே, மாநில மீனவந்துறையின் உடைமையாக இருந்து வருகிறது, அதனால் பயன்படுத்தப்பட்டும் வருகிறது. அவ்வகழியில் மீன்களை வளர்க்கவோ அல்லது அவற்றை விற்கவோ இந்திய அரசின் அனுமதி பெறப்படவில்லை, அது அவசியமுமில்லை. இவ்வகழியைப்பழுதுபார்ப்பதற்கும் மேம்பாடுகள் செய்வதற்கும் மட்டுமே, இந்திய அரசின் தொல்பொருள் துறையின் இசைவு தேவைப்படும். ஏனெனில், அகழிக்குப் பழுது பார்க்கும் பணியும் மேம்பாடுகள் செய்யும் பணியும் தொல்பொருள் கோட்பாடுகளுக்கிணங்க நிறைவேற்றப்பட வேண்டும்.

Industrial Licences

* 283 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the industrialist J. R. D. Tata who met the Chief Minister as the end of December 1969 at Madras expressed full support to the State's demand that Industrial Licensing powers should be progressively transferred to the State Government ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை, உரிமங்கள் பெறுவதிலும் நிறைவேற்றுவதிலும் உள்ள பல்வேறு இடர்பாடுகளை அவர் தெரிவித்தார்.